**வட்டாரக் கல்வி அலுவலர் பணியிடம் பதவி உயர்வு பணியிடமாக மாற்றம் செய்தல் – அரசாணை**

சுருக்கம்

பள்ளிக்கல்வி – வட்டாரக் கல்வி அலுவலர் பணியிடம் – நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடத்திலிருந்து பதவி உயர்வு பணியிடமாக மாற்றம் செய்து – ஊதிய நிர்ணயம் செய்தல் ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக்கல்வி (தொ.க.1(1)த் துறை**

**அரசாணை ( நிலை) எண்.19.** **நாள்:07/02/2019**

திருவள்ளுவர் ஆண்டு – 2050, விளம்பி வருடம், தை–24

**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (நிலை) எண்.1383, கல்வித் துறை, நாள் 23.08.1988
2. அரசாணை ( நிலை) எண்.142 பள்ளிக்கல்வித்துறை நாள்.19.06.2009
3. தமிழ்நாடு உதவித் தொடக்கக்கல்வி அலுவலர் சங்கத்தின் 10.10.2017 நாளிட்ட மனு
4. தொடக்கக்கல்வி இயக்குநரின் கடித எண்.026457/ஐ1/2017நாள்.07/12/2017மற்றும் 24/05/2018
5. அரசாணை ( நிலை) எண்.126 பள்ளிக்கல்வித்துறை நாள்.

**ஆணை**:

தொடக்கப் பள்ளி , நடுநிலைப் பள்ளிகளை ஆய்வு செய்யவும் மேற்பார்வையிடவும் ஒன்றிய அளவில் உதவி தொடக்கக் கல்வி அலுவலர் பணியிடம் உருவாக்கப்பட்டு பணியிடத்துக்கு நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பணியில் உள்ளவர்கள் பணிமாறுதல் மூலம் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்களாக நியமனம் செய்ய மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாடு தொடக்கக் கல்வி சார்நிலைப் பணி விதிகளுக்கு திருத்தம் வெளியிடப்பட்டது. மேலும் , மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் உதவி தொடக்க கல்வி அலுவலர் பணியிடம் அல்லது வட்டார கல்வி அலுவலர் என பெயர் மாற்றம் செய்யப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே, மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் உதவி தொடக்கக் கல்வி அலுவலர் பணியிடமானது நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பணியின் மாற்றுப்பணியாக 22 ஆண்டுகளாக உள்ளது என்றும், பல்வேறு நிதிச்சுமையும், பணிச்சுமையும் உள்ள இப் பணியிடம் நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பணிக்கு ஒத்தது அல்ல என்றும் , கடுமையான பணிச்சுமை உடைய பணியிடத்தை நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பள்ளி பணியில் பதவி உயர்வு பணியிடமாக உயர்த்துமாறு கோரப்பட்டது.

3. வட்டார கல்வி அலுவலர் பணியிடத்தை பதவி உயர்வு பணியிடமாக கருதவும், அதற்கான ஊட்டுப்பதவியாக நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடத்தை நிர்ணயம் செய்யலாம் என்றும் மேலும் பணியிடத்துக்கான 7வது ஊதியக்குழு Pay Matirx – Coloumn 17 இல் உள்ள ஆரம்ப ஊதியம் ரூ.36700/– லிருந்து Coloumn 18 உள்ள ஆரம்ப நிலைக்கு ரூ.36900/–மாற்றியமைக்கப்படுகிறது.

4. தமிழ்நாடு உதவி தொடக்க கல்வி அலுவலர் சங்கத்தின் கோரிக்கையை அரசு நன்கு பரிசீலனை செய்து, அதனடிப்படையில் தொடக்கக் கல்வி இயக்ககத்தின் பரிந்துரையை ஏற்க முடிவு செய்து , வட்டார கல்வி அலுவலர் பணியிடத்தை நிர்வாக காரணங்களுக்காக நடு நிலைப்பள்ளி தலைமைஆசிரியர் பணியிலிருந்து பதவி உயர்வு பணியிட மாற்றம் செய்யலாம் எனவும், பணியிடத்திற்கு தமிழ்நாடு திருத்திய ஊதிய விதிகள் 2017 இல் தெரிவிக்கப்பட்டுள்ள ஊதிய அட்டவணையில் நிலை (Level) 17 க்கு பதிலாக நிலை (Level) 17 ல் ஊதிய விகிதத்தில் ஊதியம் நிர்ணயம் செய்யலாம் எனவும் முடிவு செய்து அவரை அரசு ஆணையிடுகிறது. மேலும், தமிழ்நாடு தொடக்கக் கல்வி சார்நிலைப் பணி சிறப்பு விதிகளில் பதவி உயர்வு பணியிடமாக கருதுவதற்கு குறித்த திருத்தம் வெளியிடப்படும் நாள் முதல் இதனை நடைமுறைப் படுத்தலாம் எனவும் அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு எண்.4554/CMPC/2019 நாள் 04/02/2019 இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்